**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ. தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.307/2021**

## CASE SUMMARY

| Sl. No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : --<br>Released on : Bond U/s.88 Crpc ( 15.04.2021) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 14.12.2021 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | U/S 147 BNSS Petition filed on 12.03.2026 - Allowed | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief | Cross |
| | | PW1 –07.06.2022 | 22.11.2022<br>26.05.2025 |
| | | DW1-22.08.2025 | 22.08.2025<br>22.09.2025 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court | 11.07.2025 | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable | |
| 9 | Grant of stay by superior Courts | Not Applicable | |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:20 +0530

| | | |
|---|---|---|
| | and the results thereof | |

| | | |
|---|---|---|
| நடராஜன், வயது 78/2021,<br>த/பெ.வேணுகோபால்,<br>எண்.25/18, மன்னை நகர்,<br>மன்னார்குடி.<br>ச/பி. 138 மாற்றுமுறை ஆவணச்சட்டம், | | .............குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| காத்தமுத்து, வயது 68/2021,<br>த/பெ.கோவிந்தசாமி,<br>எண். 64 ஏ, கிரி ரோடு,<br>சீனிவாசபுரம்,<br>தஞ்சாவூர். | | ........எதிரி |

இவ்வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கு.வி.மு.ச.பிரிவு 200 ன் கீழ் தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு, அதனை இந்நீதிமன்றம் கடந்த 18.02.2021 ஆம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையிலிருந்து வந்து, 12.03.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.இளஞ்சேரன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. என்.எஸ்.நடேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டகப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (13.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**//தீர்ப்புரை//**

**1) புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்றமுறையீட்டின் சுருக்கம்**

புகார்தாரருடன் ஏற்பட்ட பழக்கத்தின் அடிப்படையில் எதிரி தன்னுடைய அவசர தேவைக்காக பல தவணைகளில் புகார்தாரரிடம் இருந்து தொகை கடனாக



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:24 +0530

பெற்றிருந்தார் என்றும், எதிரி, புகார்தாரரிடம் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தும் வகையில் எதிரியின் வங்கி கணக்குள்ள தஞ்சாவூர் சிட்டி யூனியன் வங்கி கிளையில் மாற்றத் தக்க வகையில் 18.03.2020 ம் தேதியிட்ட 001093 என்ற எண் உள்ள காசோலை, 001162 என்ற எண் உள்ள ரூ.2,00,000/-க்கான காசோலை என 3 காசோலைகளை ரூ.9,50,000/-தொகைக்கு புகார்தாரர் பெயருக்கு கொடுத்துள்ளார் என்றும், மேற்படி காசோலைகளை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தனது வங்கி கணக்குள்ள மன்னார்குடி, ஆக்ஸிஸ் வங்கி கிளையில் 04.06.2020 ம் தேதியன்று செலுத்திய போது எதிரி கொடுத்த மேற்படி 3 காகோலைகளும் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று காரணம் காட்டப்பட்டு கடந்த 05.06.2020 ம் தேதியன்று திரும்ப வந்துவிட்டது என்றும், மேற்படி காசோலைகள் பணமாக்கப்படாமல் திரும்பிய விவரம் குறித்து 10.06.2020 ல் புகார்தாரர் தன் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பில் எதிரி, புகார்தாரருக்கு காசோலைகளுக்குரிய தொகையை அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்கள் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுருந்தார் என்றும், எதிரி அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகளை பற்றி நன்கு தெரிந்து கொண்டு திட்டமிட்டு வேண்டுமென்றே அறிவிப்பினை வாங்குவதை தவிர்த்த காரணத்தினால் எதிரிக்கு அனுப்பப்பட்ட அந்த அறிவிப்பானது **Left without instruction** என காரணம் காட்டப்பட்டு புகார்தாரரின் வழக்கறிஞருக்கு கடந்த 12.06.2020 அன்று திரும்ப வந்து விட்டது என்றும், எதிரி இன்றைய தேதி வரை மேற்படி காசோலைக்குரிய பணமும் செலுத்தவில்லை என்றும், எந்த விதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை என்றும், எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்பதை நன்கு அறிந்து கொண்டும் அதனால் ஏற்படும் விளைவுகளை தெரிந்து கொண்டும் வேண்டுமென்றே திட்டமிட்டு ஏமாற்றி மோசடி செய்து புகார்தாரருக்கு- கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டுள்ளார் என்றும், எதிரியின் செய்கை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் படி குற்றமாகிறது என்றும், ஆகையால் சமூகம் நீதிமன்றத்தாரவர்கள் எதிரியை அழைத்து புகார்தாரருக்கு எதிரியிடமிருந்து வரவேண்டிய காசோலைகளுக்குரிய தொகை ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)த்தையும் மற்றும் ரூ 50,000/- சேரத்து எதிரிக்கு விதிக்கின்ற அபராதத்திலிருந்து



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.13 06:55:29 +0530

புகார்தாரருக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. புகாரைப் பெற்றுக் கொண்ட பிறகு புகார்தாரரை விசாரித்து நிரூபண வாக்குமூலம் பெற்று முதல்நோக்கு வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியதால் எதிரியை விசாரணைக்கு முன்னிலையாக வேண்டி அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன்கீழ் புகார் மனுவின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு போதுமான கால அவகாசம் வழங்கியும், எதிரி மீதான குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251 ன் கீழ் படித்து காண்பித்தபோது எதிரி குற்றததை மறுத்தார். எதிரி மீது பிரிவு 138 ன் கீழ் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. புகார்தாரர் தரப்பில் ம.சா.1 நடராஜன் சாட்சியாக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் 1 முதல் 8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எசா.1 ஆக கார்த்திகேயன் விசாரணை செய்யப்பட்டு எ.ம.சா.ஆ.1 ,2 மற்றும் நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றியவற்றை 351(1)(b) BNSS ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி "பொய்சாட்சி" என்றும், “ பொய்வழக்கு" என்றும் கூறி வழக்கை மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சி " உண்டு" என்றதன் பேரில் எதிரி தரப்பில் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், எதிரி மீது மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றம் புகார்தாரரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? அல்லது இல்லையா ? என்பதே ஆகும்.

**6. எதிரி தரப்பு வழக்கின் சுருக்கம்**

புகார்தாரர் எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், புகார்தாரர்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:33 +0530

கொடுத்த கடனை எல்லாம் வங்கி மூலம் எதிரி கொடுத்துவிட்டார் என்றும், எதிரி கொடுத்த காசோலை எல்லாம் கொரோனா காலம் என்பதனால் புகார்தாரர் தேடி எடுத்து தருகிறேன் என்று சொன்னதை நம்பி இருந்துவிட்டார் என்றும், புகார்தாரர் தீர்ந்து போன கடனுக்காக எதிரியிடம் பெற்று வைத்திருந்த காசோலைகளை பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் சட்டப்பூர்வமான கடன் இல்லை என்றும், ஆகையால் இந்த புகார் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்ய அருகதை உடையது என்றும் வாதிடப்பட்டது.

**7. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரி மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் விசாரிக்கத்தக்க வகையில் குற்றம் புரிந்துள்ளரா? என்பதை புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கின்றபோது, வாதி தரப்பில் சத்தியப்பிரமாண நிரூபண ஆணையுறுதி ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. புகார்தாரர் தரப்பில், 18.03.2020 ஆம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலை அசல் (காசோலை எண்.001093) (ரூ.500000/-) - ம.சா.ஆ.1, 05.06.2020 ம் தேதியிட்ட வங்கி குறிப்பு- ம.சா.ஆ.2, 18.03.2020 ஆம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலை அசல் (ரூ.200000/-) - ம.சா.ஆ.3, 05.06.2020 ஆம் தேதியிட்ட வங்கி குறிப்பு அசல் (காசோலை எண். 001134) - ம.சா.ஆ.4, 18.03.2020 ம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலை அசல் (காசோலை எண்.001062) (ரூ.200000/-)- ம.சா.ஆ.5, 05.06.2020 ம் தேதியிட்ட வங்கி குறிப்பு அசல் (காசோலை எண்.001062)- மசா.ஆ.6, 10.06.2020 ம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல், மசா.ஆ.7, 10.06.2020 ம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பி திரும்ப வந்த வழக்கறிஞர் அறிவிப்பு (அசல்) ம.சா.ஆ.8 மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் முதல்நோக்கு வழக்கிற்கு தேவையான சங்கதிகள் இருப்பதாகவும் அறியமுடிகிறது.

8. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 118 (அ) ஆகியவற்றின் மீதான சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ளது. பிரிவு



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.13 06:55:37 +0530

118(அ)ன் படி மறுத்துக்கூறும் சங்கதிகளை நிரூபித்தாலன்றி (Until the contrary is proved) கொடுக்கப்பட்ட ஆவணம் மறுபயனிற்காக வழங்கப்பட்டதாகவே கருதவேண்டும் என்று விளம்புகிறது. பிரிவு 139 மாற்றுமுறை ஆவணத்தை வைத்திருப்பவரிடம் அதை கொடுத்தவர் கடனுக்காக கொடுத்ததாகவே அனுமானிக்க வேண்டும் என்று கூறுகிறது. எனவே பிரிவு 118(அ) மற்றும் 139 ஆகியவற்றில் கூறியுள்ளவாறு எதிரி தனது தரப்பிலான வாதத்தை நிரூபிக்காத வரை காசோலை கடனுக்காகத்தான் வழங்கியதாக அனுமானிக்க வேண்டும் என்று பிரிவு 138 ல் கூறப்பட்டுள்ளது.

9. புகார்தாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் புகார்தாரருடன் ஏற்பட்ட பழக்கத்தின் அடிப்படையில் எதிரி தன்னுடைய அவசர தேவைக்காக பல தவணைகளில் புகார்தாரரிடம் இருந்து தொகை கடனாக பெற்றிருந்தார் என்றும், எதிரி, புகார்தாரரிடம் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தும் வகையில் எதிரியின் வங்கி கணக்குள்ள தஞ்சாவூர் சிட்டி யூனியன் வங்கி கிளையில் மாற்றத் தக்க வகையில் **18.03.2020** ம் தேதியிட்ட **001093** என்ற எண் உள்ள காசோலை, **001162** என்ற எண் உள்ள ரூ.**2,00,000/-**க்கான காசோலை என **3** காசோலைகளை ரூ.**9,50,000/-** தொகைக்கு புகார்தாரர் பெயருக்கு கொடுத்துள்ளார் என்றும், மேற்படி காசோலைகளை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தனது வங்கி கணக்குள்ள மன்னார்குடி, ஆக்ஸிஸ் வங்கி கிளையில் **04.06.2020** ம் தேதியன்று செலுத்திய போது எதிரி கொடுத்த மேற்படி **3** காசோலைகளும் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று காரணம் காட்டப்பட்டு கடந்த **05.06.2020** ம் தேதியன்று திரும்ப வந்துவிட்டது என்றும், மேற்படி காசோலைகள் பணமாக்கப்படாமல் திரும்பிய விவரம் குறித்து **10.06.2020** ல் புகார்தாரர் தன் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பில் எதிரி, புகார்தாரருக்கு காசோலைகளுக்குரிய தொகையை அறிவிப்பு கிடைத்த **15** தினங்களுக்கள் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுருந்தார் என்றும், எதிரி அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகளை பற்றி நன்கு தெரிந்து கொண்டு திட்டமிட்டு வேண்டுமென்றே அறிவிப்பினை வாங்குவதை தவிர்த்த காரணத்தினால் எதிரிக்கு அனுப்பப்பட்ட அந்த அறிவிப்பானது **Left without instruction** என காரணம் காட்டப்பட்டு புகார்தாரரின் வழக்கறிஞருக்கு கடந்த **12.06.2020** அன்று திரும்ப வந்து விட்டது



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:42 +0530

என்றும், எதிரி இன்றைய தேதி வரை மேற்படி காசோலைக்குரிய பணமும் செலுத்தவில்லை என்றும், எந்த விதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை என்றும், எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்பதை நன்கு அறிந்து கொண்டும் அதனால் ஏற்படும் விளைவுகளை தெரிந்து கொண்டும் வேண்டுமென்றே திட்டமிட்டு ஏமாற்றி மோசடி செய்து புகார்தாரருக்கு- கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டுள்ளார் என்றும், எதிரியின் செய்கை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் படி குற்றமாகிறது என்றும், ஆகையால் சமூகம் நீதிமன்றத்தாரவர்கள் எதிரியை அழைத்து புகார்தாரருக்கு எதிரியிடமிருந்து வரவேண்டிய காசோலைகளுக்குரிய தொகை ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)த்தையும் மற்றும் ரூ 50,000/- சேரத்து எதிரிக்கு விதிக்கின்ற அபராதத்திலிருந்து புகார்தாரருக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

10. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் தன்னை சாட்சியாக விசாரித்தும், 8 ஆவணங்களை குறியீடு செய்தும் எதிரிக்கு எதிராக வழக்கை நிரூபித்துள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கி இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இந்த வழக்கில் ரூ.9,50,000/-த்திற்கு காசோலை வழக்கு தாக்கல் செய்து புகார்தாரர் தரப்பு விசாரணை முடிந்து எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணைக்கு போடப்பட்டும், எதிரி தரப்பில் சாட்சி விசாரணை செய்யப்பட்டு பின்னர் தரப்பினர்கள் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது.

12. புகார்தாரர் தரப்பில் ச/பி. 147 NI Act ன் கீழ் மனு தாக்கல் செய்து எதிரியும், புகார்தாரரும் நீதிமன்றத்திற்கு வெளியே சமரசமாக பேசி காசோலைக்குரிய தொகை முழுவதையும் எதிரியிடமிருந்து புகார்தாரர் பெற்றுக்கொண்டதால் வழக்கை சமரசம் செய்து கொண்டு எதிரியை விடுவிக்க ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

13. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம்

B.V.Seshaiah Vs. State of Telangana

&

Vamsikrishna Vs.State of Telangana 2023 Live Law(SC)75

என்ற வழக்கில்,



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:46 +0530

*"terms and conditions of the settlement entered into by parties binds them to settle the dispute amicably or through an arbitration as has been stated clause 8 of the memorandum of understanding. In such a circumstances, the Appellants cannot be convicted on the basis of the order passed by the courts below, as the settlement is nothing but a compounding of the offence"*

என்று எடுத்துரைத்துள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. மேலும், பிரிவு 147 NI ACT ன் கீழான குற்றம் எந்த நேரத்திலும் சமரசம் செய்யக்கூடிய குற்றம் என்பதால் புகார்தாரர் தாக்கல் செய்த சமரச மனுவை ஏற்றுக்கொண்டு சமரசத்தின் அடிப்படையில் எதிரி விடுதலை செய்யப்படுகிறார்.

14. இறுதியாக, மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138 ன் கீழ் எதிரி குற்றம் புரிந்தவர் அல்ல என இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

15.எதிரி பிணைமுறி ஏதேனும் எழுதிக்கொடுத்திருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றம் அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

-

**1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :**

| | |
|---|---|
| ம.சா.1 | நடராஜன் |

**2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.03.2020 | குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலை அசல் (காசோலை எண்.001093) (ரூ.500000/-) |
| ம.சா.ஆ.2 | 05.06.2020 | வங்கி குறிப்பு |
| ம.சா.ஆ.3 | 18.03.2020 | குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலை அசல் (ரூ.200000/-) |
| ம.சா.ஆ.4 | 05.06.2020 | வங்கி குறிப்பு அசல் (காசோலை எண். 001134) |
| ம.சா.ஆ.5 | 18.03.2020 | குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலை அசல் (காசோலை எண்.001062) (ரூ.200000/-) |
| ம.சா.ஆ.6 | 05.06.2020 | வங்கி குறிப்பு அசல் (காசோலை எண்.001062) |
| ம.சா.ஆ.7 | 10.06.2020 | குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.8 | 10.06.2020 | குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பி திரும்ப வந்த வழக்கறிஞர் அறிவிப்பு (அசல்) |

**3. எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி :**

| | |
|---|---|
| எ.சா.1 | கார்த்திகேயன் |

**4. எதிர் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | -- | சமரச உத்தரவு |

**5. நீதிமன்ற சான்றாவணம்**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 08.02.2012 ம் தேதியிலிருந்து 31.10.2018 வரையிலான புகார்தாரர் வங்கி கணக்கு எண்.373110100105З என்ற வங்கி சேமிப்பு கணக்கு விவரம் |

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 06:55:57 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

குறிப்பு

1. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. வழக்கின் முடிவு தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

நகல் :

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.